**கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி**
**அசல் வழக்கு எண். 110/2019**
**நாள் 20/12/2023, புதன்கிழமை**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பின் 1-வது சாட்சியின் வாக்குமூலம் 1878ம் ஆண்டில் 10-வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் - வெங்கடேஷ் என்கிற வெங்கடேசன் | த/பெயர் - கேசவரெட்டி |
| வயது - 53 | தொழில் - |
| விலாசம் - லிங்கபையன் பேட்டை கிராமம், பெரும்பேடு அஞ்சல், பொன்னேரி வட்டம், திருவள்ளூர் மாவட்டம். | |

**குறுக்கு விசாரணை-**

நான்இந்த வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் பிரதிவாதி எனது இடத்தில் வீடு கட்டியுள்ளார் அதை காலி செய்து கொடுக்க வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்தை சுற்றி வேலி அமைத்துள்ளேன் என்றால் கம்பி வேலி அமைத்துள்ளேன். மேற்படி வேலி 3 ஆண்டுகளுக்கு முன்பு அமைக்கப்பட்டது. அதற்கு முன்பு முள் வேலி அமைத்திருந்தேன். மேற்படி வேலி ஆடு, மாடு வராமல் இருக்க போடப்பட்டது. தாவா சொத்தில் 1977-ல் இருந்து சாகுபடி செய்து வருகிறோம். எனது தகப்பனார் காலத்தில் இருந்து சாகுபடி செய்கிறோம். சாகுபடி செய்யப்பட்ட காலத்தில் இருந்து முள்ளை வெட்டி போட்டு வேலியாக பயன்படுத்தப்பட்டது. தாவா சொத்தின் விஸ்தீரணம் 1.91 சென்ட் ஆகும். நாங்கள் நிலத்தை வாங்கியபோது நிலத்தை அளக்கவில்லை. 1996-ல் தாவா சொத்து குறித்து ஒரு ஆவணம் ஏற்படுத்தப்பட்டது அப்போதாவது நிலத்தை அளந்தேனா என்றால் இல்லை. எனது குடும்ப நபர் இடையே 2016-ல் பாகப்பிரிவினை ஏற்பபட்டது. அப்போதும் அளந்து

பார்க்கவில்லை. நாங்கள் அமைத்த வேலியை தாண்டி பிரதிவாதியை தவிர்த்து கரைக்கு மேற்காக 3 நபர்கள் உள்ளனர். மேற்படி மூன்று வீடும் தாவா சொத்தில் தான் உள்ளதா என்றால் ஆமாம். மூன்று வீடும் இருக்க மற்ற 2 பேர் மீது வழக்கு தாக்கல் செய்யாததற்கு என்ன காரணம் என்றால் அந்த இரு நபர்கள் மீது வழக்கு தாக்கல் செய்வதாக உள்ளேன்.

**(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப் பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பொன்னேரி.**